**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**OS.No.24/2020- DW-1**

| | |
|---|---|
| Name | திரு.ஏ.சந்தானம் |
| Father Name | திரு.லேட்.ஆறுமுகம் |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 03.11.2025.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை:–**

வாதி என் சகோதரி. 1–ம் பிரதிவாதி என் தாயார். 2 முதல் 6 பிரதிவாதிகள் வாதிக்கும், எனக்கும் சகோதர சகோதரிகள். நான் எனக்காகவும், 1, 3 பிரதிவாதிகள் குப்பம்மாள், தயாளன் ஆகியோருக்காகவும் சாட்சியம் அளிக்கிறேன். வழக்கு சொத்தில் பாகம் கேட்டு வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்துகள் பற்றி எல்லா விவரங்களும் எனக்கு தெரியும். நானும், என் அண்ணன், தம்பிகள் சேர்ந்து சம்பாதித்த பணத்தைக் கொண்டு என் தந்தை பெயரில் வழக்கு சொத்துகள் கிரையம் வாங்கப்பட்டது. இந்த விவரத்தை என்னுடைய எதிர் வழக்குரையில் சொல்லியிருக்கிறேன். வழக்கு சொத்துகள் எங்கள் வருமானத்தில் என் தந்தை பெயரில் கிரையம் வாங்கப்பட்டதாக எதிர் வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றாலும், தற்போது வழக்கிற்காக நான் பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.3 பட்டாவில் என் தந்தையார் வாரிசுகளான வாதி பெயரும் மற்றும் 1 முதல் 6 பிரதிவாதிகள் பெயர்களும் உள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.13 மற்றும் பி.சா.ஆ.14 பட்டா ஆவணங்கள் இந்த வழக்கிற்கு பிறகு பெறப்பட்ட ஆவணங்கள் என்றால் நான் வழக்கிற்கு முன்பே பட்டா கேட்டு, வழக்கிற்கு பிறகு தான் கொடுத்தார்கள். பி.சா.ஆ.15 பட்டா வழக்கு தாக்கல் செய்வதற்கு சில மாதங்களுக்கு முன்பு பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.1, பி.சா.ஆ.2 மற்றும் பி.சா.ஆ.3 அக்கு விடுதலை ஆவணங்கள் வழக்கு 4–வது இனச்சொத்துக்கு சம்மந்தமில்லாதது என்றால் சரியல்ல. பி.சா.ஆ.4 அக்கு விடுதலை ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள விஸ்தீரணம் மற்றும் சர்வே எண் வழக்கு 10–வது இனச்சொத்திற்கு சம்மந்தமில்லாதது என்றால் சரியல்ல. 02.02.2015 தேதியிட்ட பொது அதிகார பத்திரம் யார் பெயருக்கு எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் அந்த ஆவணத்தை பார்த்தால் தான் சொல்ல முடியும். எத்தனை பொது அதிகார பத்திரம் எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. ஆவணங்களை பார்த்தால் தான் என்னால் சொல்ல முடியும். என் பெயரில் அக்கு விடுதலை பத்திரமும், ஒரு பொது அதிகார பத்திரமும்

உள்ளது. என் பெயரில் எழுதிக் கொடுக்கப்பட்ட பொது அதிகார பத்திரம் மனை சம்மந்தப்பட்டதா, நிலம் சம்மந்தப்பட்டதா என்றால் நிலங்கள் சம்மந்தப்பட்டது. நிலங்கள் சம்மந்தமாக எனக்கு பொது அதிகார பத்திரம் எழுதிக்கொடுக்கப்பட்டதாக சொல்வது தவறு என்றாலும், மனைகள் சம்மந்தமாக தான் பொது அதிகார பத்திரம் எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. என் தந்தை ஆறுமுகம் சுப்பிரமணியன் என்பவரிடமிருந்து எத்தனை சென்டு கிரையம் வாங்கினார் என்பதை பத்திரத்தை பார்த்து தான் சொல்ல முடியும். என் தந்தை சுப்பிரமணியனிடம் கிரையம் வாங்கிய சொத்தை நடராஜன் என்பவரிடம் என் தந்தை விற்றுவிட்டார். என் தந்தை ஆறுமுகம் நடராஜனுக்கு கிரையம் செய்த கொடுத்த அன்றே சுப்பிரமணியனிடம் 15 சென்ட் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் வாங்கியிருக்கலாம். பி.சா.ஆ.6 அக்கு விடுதலை பத்திரத்தை பதிவு செய்வதற்கு வாதி பதிவு அலுவலகத்திற்கு உள்ளே வந்து அங்குள்ள பதிவேடுகளில் கைரேகை வைக்கவில்லை என்றால் சரிதான். அதனால் பி.சா.ஆ.6 அக்குவிடுதலை பத்திரம் செல்லாது என்றால் சரியல்ல. பி.சா.ஆ.6 அக்கு விடுதலை பத்திரத்தில் வாதி கையெழுத்தே போடவில்லை என்றால் சரியல்ல. பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.5 ஆவணங்களை வாதி எழுதிக்கொடுக்கவோ அந்த ஆவணங்களில் கையெழுத்து போடவோ இல்லை என்றால் தவறு. வாதி அவருக்குரிய 7–ல் 1 பங்குக்கான பணத்தை பெற்றுக்கொண்டார். வாதியிடம் பணத்தை கொடுத்ததற்கு ரசீது வாங்கினேனா என்றால் வாங்கவில்லை. வாதிக்கு அந்த சொத்துகளில் பங்கு உரிமையிருந்ததால் தான் பணம் கொடுத்ததாக சொல்கிறேனா என்றால் சரிதான். நான் சொல்வது போல் வாதிக்கு நான் பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும், வாதியின் பாகத்தை ஏமாற்ற வேண்டுமென்பதற்காக பணம் கொடுத்ததாக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வாதி கோரியப்படி அவருக்கு பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:–</u>** இல்லை

BALAKRISHNAN

Digitally signed by BALAKRISHNAN
DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District Judge,
Ranipet.